# உடன்பிறப்பே... 6

**தி.மு.க என்பது எதிரிகளால் அழிக்கமுடியாத இரும்புக்கோட்டை. இந்தக் கோட்டையை கட்டியெழுப்பி இயக்க வரலாற்றில் இடம்பிடித்த தீரர்கள் சிலரை, வாரா வாரம் இங்கு நினைவுகூர்வோம். அந்தவகையில் இந்த வாரம், பெரியார்-அண்ணா-கலைஞருடன் பயணித்து கழகம் வளர்த்த மன்னை ப.நாராயணசாமி அவர்களைப் பற்றிப் பார்ப்போம்.**



ஓவியம் : ரவிபேலட்

# மன்னை ப.நாராயணசாமி: மிட்டா மிராசுகளின் சிம்ம சொப்பனம்!

*1972*-ஆம் ஆண்டு முதலமைச்சராக இருந்தார் முத்தமிழறிஞர் கலைஞர். அந்த நேரத்தில் கழகத்தைத் துண்டாடித் தனித் தலைமையாகும் நோக்கத்தில் பிரிந்த எம்.ஜி.ஆர், கழக அணிகளுக்குள் பல குழப்பங்களைச் செய்கிறார். ஆட்சியைத் திறம்படக் கொண்டு சென்றால் மட்டும் போதுமா? கழகத்தைக் கட்டுக்கோப்பாக வைக்கக் களமிறங்கினார் கலைஞர். அவருக்குப் பிடித்தமானது கொள்கை விளக்கக் கூட்டங்கள். கழகத்தில் சலசலப்பு ஏற்பட்ட இடங்களுக்கு எல்லாம் அவர் கால்தடம் செல்கிறது. அப்படிச் சென்ற இடம் பட்டுக்கோட்டை.

கழகத்தின் உறுதிமிக்க கோட்டையாக இருந்த பட்டுக்கோட்டையில், அப்போது எதிரணி கை ஓங்கி இருந்தது. ஒரத்தநாட்டில் தங்கி இருக்கிறார் கலைஞர். விடிந்தால் காலையில் பட்டுக்கோட்டை செல்லவேண்டும். ‘கலைஞர் எப்படி பட்டுக்கோட்டைக்குள் நுழைவார் எனப் பார்ப்போம்’ என்று தொடைதட்டிக் காத்திருக்கிறது ஒரு கூட்டம். “நான் இருக்க, என் தலைவனுக்குச் சவால்விடுவது யார்” என முன்னே நிற்கிறார் மன்னை.

‘மன்னை’ என்கிற மன்னார்குடி ஊர்ப்பெயரை அடைமொழியாகக் கொண்ட கழகத்தின் ஆற்றல்மிகு செயல்வீரர் மன்னை.ப.நாராயணசாமி. இரட்டை மாடு பூட்டிய, கட்டை வண்டியை அலங்கரித்து, தலைவர் கலைஞரை அமர்த்தி பட்டுக்கோட்டை நகர வீதியெங்கும் அழைத்துச்சென்றார். எதிர்த்த கூட்டம் ஓடி ஒளிகிறது.

## கழகத்தின் ஆயுத எழுத்து!

மன்னை இருக்கிறார் என்றால், எப்பேர்ப்பட்ட சண்டியராக இருந்தாலும் அந்த இடத்தில் அடக்கி வாசிக்க வேண்டும் என்பதே அந்தக் காலத்தில் எழுதப்படாத விதியாக மன்னார்குடி சுற்றுவட்டாரத்திலிருந்தது. தீவிரமான நாத்திகர், தன்னுடைய திருமணத்தையே ராகு காலத்தில் வைத்தவர். தனது வீட்டுப் புதுமனை புகுவிழாவை கரிநாளில், ராகு காலத்தில் திறந்தவர் என தந்தை பெரியாரின் பெரும் சீடராகத் திகழ்ந்தவர்.

‘உயிரெழுத்து, மெய்யெழுத்து, உயிர்மெய் எழுத்து’ என கழகத்தில் ஆயிரம் பேர் இருந்தாலும் கழகத்தின் ‘ஆயுத எழுத்து மன்னை நாராயணசாமிதான்’ என கலைஞரே மன்னையின் துணிவு குறித்துக் குறிப்பிட்டிருக்கிறார் எனில், அவரது களச்செயல்களைக் கற்பனை செய்துகொள்ளலாம்.

## கலக நெருப்பு!

அன்றைய ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தில் கழகத்தின் வளர்ச்சி அவ்வளவு எளிதாக நடக்கவில்லை. இத்தனைக்கும் தலைவர் கலைஞர், தனது இளமைக் காலத்தில் அரசியல் பருவத்தை எட்டிய ஊரில், கழகத்தை வளர்ப்பது சாதாரணமாக நிகழவில்லை.

பெரும் நிலச்சுவான்தார்கள், மிட்டா மிராசுகளின் ஆதிக்கம் நிறைந்த அன்றைய தஞ்சை மாவட்டத்தில் காங்கிரஸ் கட்சி பெரும் செல்வாக்குச் செலுத்தியது. அவர்களை எதிர்த்து அரசியல் செய்ய வேண்டும். தவிர, விவசாயக் கூலித் தொழிலாளர்கள் நிறைந்த பகுதி என்பதால், அவர்களிடையே கம்யூனிஸ்ட் கட்சி கோலோச்சிக்கொண்டிருந்தது. **இந்த இரண்டு மலைகளுக்கும் இடையில் உதயசூரியனை உதிக்க வைத்தவர் மன்னை நாராயணசாமி என்றால் மிகையில்லை.**


## அண்ணாவின் நம்பிக்கை!

“நமது கட்சியின் கொள்கைகளை, கோட்பாடுகளை நாம் உரசிப் பார்க்க வேண்டும் என்றால், மன்னார்குடியில் ஒரு கூட்டம் போடுங்கள். மக்கள் நமது கொள்கைகளுக்குக் கைதட்டி வரவேற்பு அளித்தால், நாம் மேற்கொண்டு செல்வோம்” என பேரறிஞர் அண்ணா சொல்லும் அளவுக்கு மன்னார்குடி இருந்தது. மன்னையின் அரசியல் செல்வாக்கு இருந்தது.

*1966*- ஆம் ஆண்டு ஜூலை மாதம் சிவகங்கையில் நடைபெற்ற கழக மாநாட்டின் தலைவராக மன்னையை அறிவித்தார் அண்ணா. தமது **‘காஞ்சி’** இதழில், அது தொடர்பான அறிவிப்பில், “சுறுசுறுப்புமிக்கவர், சுற்றிச் சுற்றிச் செயலாற்றும் தீரர், உழவர் பெரும்படையின் உள்ளம் அறிந்தவர்” என மன்னையைக் குறிப்பிட்டார். **“எறும்பனையர் எம்மறவர்”** என மன்னையைப் புகழ்ந்து, மன்னை அழைப்பதாக அழைப்புவிடுத்தார். ‘அரசியல் என்றால் நாணயம், நாணயம் என்றால் மன்னை’ எனப் புகழ்ந்தார் அண்ணா.

**தஞ்சை பெரியார், தஞ்சை மாவட்ட தளகர்த்தர், அண்ணாவின் இளவல், கலைஞரின் தோழமை, தொண்டர்களின் தொண்டனாகத் திகழ்ந்த மன்னை, கழகத்தின் ஆயுத எழுத்தாக என்றும் நினைவில் நிற்பார்.**

## களப்பணி வீரர்



*1951*-ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் திருவையாறு வரும் ராஜகோபாலாச்சாரிக்குக் கருப்புக் கொடி போராட்டம் நடத்த வேண்டும் என முடிவு செய்கிறார் கலைஞர். அதற்காக அப்போதைய தஞ்சை மாவட்டச் செயலாளர் குடந்தை கே.கே. நீலமேகத்தைச் சந்திக்கிறார் கலைஞர். உடன் சென்றவர் மன்னை. மக்களிடம் ஆதரவு பெருகாத நிலையில், அந்த முடிவை எடுக்க வேண்டாம் என நீலமேகம் சொல்ல, ‘ஆதரவைத் திரட்டுகிறேன்’ என ஒரு மாதம் தொடர்ச்சியாக ஒவ்வொரு ஊரிலும் கூட்டங்களை நடத்துகிறார் கலைஞர். உடன் நின்றவர் மன்னை. அப்படி ஆதரவு திரட்டி, தஞ்சையில் பெரும் படையையே கொண்டு வந்து நிறுத்தினார்கள்.

*1962*-ஆம் ஆண்டு தேர்தலில், தஞ்சையில் போட்டியிட்டார் கலைஞர். மன்னார்குடி தொகுதியில் மன்னை களத்தில் நின்றார். ஆனால், தனது தொகுதியில் தனக்காக வாக்குசேகரிக்கும் பணியில் ஈடுபடாமல், தன் தலைவனுக்காக தஞ்சையிலேயே களப்பணி ஆற்றியவர் மன்னை. ‘தலைவனை வெற்றிபெற வைப்பதே, கள வீரர்களின் தலையாயப் பணி’ என்ற அரசியல் அரிச்சுவடி அறிந்தவர் மன்னை. அந்தத் தேர்தலில் கலைஞர் பெற்ற வெற்றி, தஞ்சையில் காங்கிரஸ் கோட்டையைத் தகர்த்தது. அதற்குப் பின்னர்தான் ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டம் தி.மு.கவின் கோட்டையாக மாறியது.

## கலைஞருடன் நட்பும் அன்பும்

திராவிடர் கழகத்தில் ஈடுபாடு கொண்ட காலத்திலிருந்தே, கலைஞருடன் ஆழமாக நட்பைப் பேணியவர் மன்னை. கலைஞரை விட வயதில் மூத்தவராக இருந்தாலும், கலைஞரைத் தனது தலைவனாக ஏற்றுக் கொண்டு கடைசி வரை அவருக்கு அரணாக இருந்து புகழ் சேர்த்தவர். இளவயது நண்பர் என்பதால், ‘திருவாரூர் தெப்பக்குளம் பெரியதா? மன்னார்குடி தெப்பக்குளம் பெரியதா?’ என இரண்டு பேருக்கும் வாதங்களும் நடக்கும்.

“அன்னை மடியில் பிறந்தேன், மன்னை மடியில் வளர்ந்தேன்” என மன்னை குறித்து கலைஞர் கவிதை பாடி இருக்கிறார். கலைஞருக்குப் பிறந்த நாள் வாழ்த்துச் செய்தி ஒன்றில், “என் ஆருயிர்த் தம்பி நீ, என் அன்புத் தலைவன் நீ, உன்னோடு களம் பல கண்டு, களிப்பெய்தி வாழ்ந்த நாட்களை எண்ணி நினைத்துப் பார்க்கிறேன்” என மன்னை குறிப்பிடுகிறார்.

கலைஞர், திருவாரூருக்கு கலைக் கல்லூரி அறிவித்தபோது, மன்னார்குடியிலும் கல்லூரி தொடங்க, கலைஞரிடம் உரிமையோடு கேட்டு இராஜகோபாலசாமி கோயில் நிலத்தைப் பெற்று இடம் வழங்கி இருக்கிறார். ‘மன்னையை நான் முந்திக் கொள்வேன்’ என்று கலைஞரும், ‘கலைஞரை நான் முந்திக் கொள்வேன்’ என மன்னையும் மாறி மாறி பேசிக் கொள்ளும் அளவுக்கு அவர்களின் நட்பு இருந்தது.

## பொறுப்புகளில் மன்னை

ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டச் செயலாளர், கழகத்தின் சொத்துப் பாதுகாப்புக் குழு உறுப்பினர், கலைஞரின் அமைச்சரவையில் உணவு மற்றும் வேளாண்மை, உள்ளாட்சித் துறை, கூட்டுறவு என பல துறைகளின் அமைச்சராகத் திறம்படச் செயலாற்றி இருக்கிறார்.

‘கொண்ட கொள்கையில் விசுவாசம்’, ‘துன்பத்தைத் தாங்கும் தொண்டன்’ எனத் திகழ்ந்த மன்னை *1993*- ஆம் ஆண்டில் மறைந்தார். கழகத்துக்கும் கலைஞருக்கும் நெருக்கடி உருவானபோதெல்லாம் கலைஞரின் கரம் பற்றி, ‘ஆயிரம் யானைக்குச் சமம்’ எனக் களம் கண்டவர் மன்னை. அவரது நினைவைப் போற்றும்விதமாக, ஒரத்தநாடு ஒன்றியத்தில் ஓர் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு அவரது பெயரைச் சூட்டினார் கலைஞர். கழகத்தின் சார்பில் முப்பெரும் விழா விருதுகள் அறிவித்தபோது, பெரியார் விருது முதன்முதலில் மன்னையாருக்கே அளிக்கப்பட்டது.

தஞ்சை பெரியார், தஞ்சை மாவட்ட தளகர்த்தர், அண்ணாவின் இளவல், கலைஞரின் தோழமை, தொண்டர்களின் தொண்டனாகத் திகழ்ந்த மன்னை, கழகத்தின் ஆயுத எழுத்தாக என்றும் நினைவில் நிற்பார்.

(துடிக்கும்...)

## ஏற்றம் பெறட்டும், ஏறுதழுவல்!




மொழி உரிமைப் போராட்டத்துக்குப் பிறகு தமிழ்ச் சமூகம் தனது கலாச்சார, பண்பாட்டு உரிமையைப் போராடிப் பெற்றது ஜல்லிக்கட்டுப் போராட்டத்தின் மூலம்தான். ‘மாநிலத்தின் பண்பாட்டு உரிமைக்காக, சட்டமன்றம் இயற்றிய சட்டத்தை ரத்து செய்யும் அதிகாரம் நீதிமன்றத்துக்கு இல்லை’ என்ற தீர்ப்பை உச்சநீதிமன்றம் சமீபத்தில் வழங்கியுள்ளது. பண்பாட்டுப் போராட்டம் சட்டப்பூர்வமாகவும் வென்றுள்ளது.

இந்நிலையில் ‘தண்டரஸ் ரன், பவுன்டிஃபுல் ஹார்வெஸ்ட்: புல் ஸ்கேப்ஸ் ஆஃப் தமிழ் ஜியாகரபி’ (Thunderous Run, Bountiful Harvest: Bull Scapes Of Tamil Geography) என்ற தலைப்பில் ஏப்ரல் மாதம் நம் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களால் ஓர் ஆய்வு நூல் வெளியிடப்பட்டது. கழகச் சுற்றுச்சூழல் அணி செயலாளர் கார்த்திகேய சிவ சேனாதிபதி, ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக இயக்குநர் சுந்தர் கணேசன், கட்டடக் கலைஞர் கார்த்திக் ஆகியோர் ஜல்லிக்கட்டுக் காளைகள் குறித்தும், அதைச் சுற்றிய வாழ்வியல் குறித்தும் தமிழ்நாடெங்கிலும் 5 ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வுகள், எண்ணற்ற நேர்காணல்கள், தொல்லியல் சான்றுகள் போன்றவற்றைத் தரவாகக் கொண்டு இந்நூலை எழுதி வெளியிட்டுள்ளனர்.

## :ப்ளாஷ்பேக்



ஆம் ஆண்டு பேராவூரணிப் பகுதியில் நடைபெற்ற கழக வளர்ச்சி நிதி அளிப்புக் கூட்டத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நான் தீவிரமாக நிதி வசூல் செய்தமைக்காக, கைத்தறி ஆடையை அணிவித்துப் பாராட்டினார். அப்போது எடுக்கப்பட்ட புகைப்படம் இது. 77 வயதிலும் அந்த நினைவு மங்காமல் இருக்கிறது.

**-கோ.நீலகண்டன், மாவட்டத் துணை அமைப்பாளர் நெசவாளர் அணி, தஞ்சை மாவட்டம்.**



நீலகண்டன்

### கைத்தறிப் பாராட்டு!

தி.மு.கவை விட்டு ஈ.வெ.கி.சம்பத் பிரிந்த ஆண்டான 1961-ஆம் ஆண்டில் கழகத்தில் நுழைந்தேன். மிசா காலத்தில் தமிழ்நாடு முழுக்க கழகத் தோழர்கள் முடக்கப்பட்டபோது, தஞ்சாவூர் பகுதியில் ரகசியக் கூட்டங்கள் நடத்தி, கட்சியை உயிர்ப்புடன் வைத்திருந்தோம். 1980-


இது போன்ற அரிய புகைப் படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### அரசு துணை நிற்கும்!

**1971-ஆம் ஆண்டு, கலைஞர் முதலமைச்சராகப் பதவி ஏற்றதும் வானொலியில் உரை நிகழ்த்தினார். ‘‘தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் கழக அரசினை தங்களுக்குப் பாதுகாப்பான மெய்க்காப்பாளனாகவும், தங்களுக்குப் பணியாற்றும் ஊழியனாகவும், தங்கள் வீட்டில் ஏற்றி வைக்கப்பட்ட விளக்காகவும் தமிழ்ப் பெருங்குடி மக்கள் நம்பிக்கொண்டிருப்பதை உணர்ந்து, அதற்கேற்றவாறு உழைப்பதற்கு நாங்கள் சூளுரை மேற்கொண்டிருக்கிறோம். ஏழை எளிய மக்கள் வாழ்வு ஒளிபெற, சாதி பேதமற்ற சமூகநீதி நிலைத்திட சமதர்மம் நடைமுறைக்கு வந்திட, தனிமனிதனின் வாழ்வுக்கான அடிப்படைச் சொத்துரிமைகளைச் சீர்குலைக்காமல் இந்த அரசு பணியாற்றும்’’ என்றார்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 123




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131